| Roll No. | | | | | | | | | | | | Serial No. of Q. C. A. B. |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|

ಒಟ್ಟು ಪ್ರಶ್ನೆಗಳ ಸಂಖ್ಯೆ : 63 ] [ ಒಟ್ಟು ಮುದ್ರಿತ ಪುಟಗಳ ಸಂಖ್ಯೆ : 24

Total No. of Questions : 63 ] [ Total No. of Printed Pages : 24

ಸಂಕೇತ ಸಂಖ್ಯೆ : **10-T** **ವಿಷಯ : ಪ್ರಥಮ ಭಾಷೆ — ತಮಿಳು**

**Code No. : 10-T** **Subject : First Language — TAMIL**

ದಿನಾಂಕ : 01. 04. 2013 ] [ Date : 01. 04. 2013

ಸಮಯ : ಬೆಳಿಗ್ಗೆ 9-30 ರಿಂದ ಮಧ್ಯಾಹ್ನ 12-45 ರವರೆಗೆ ] [ Time : 9-30 A.M. to 12-45 P.M.

ಪರಮಾವಧಿ ಅಂಕಗಳು : 125 ] [ Max. Marks : 125

**FOR OFFICE USE ONLY**

| Q. No. | Marks | Q. No. | Marks | Q. No. | Marks | Q. No. | Marks | Q. No. | Marks |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1. | | 14. | | 27. | | 40. | | 53. | |
| 2. | | 15. | | 28. | | 41. | | 54. | |
| 3. | | 16. | | 29. | | 42. | | 55. | |
| 4. | | 17. | | 30. | | 43. | | 56. | |
| 5. | | 18. | | 31. | | 44. | | 57. | |
| 6. | | 19. | | 32. | | 45. | | 58. | |
| 7. | | 20. | | 33. | | 46. | | 59. | |
| 8. | | 21. | | 34. | | 47. | | 60. | |
| 9. | | 22. | | 35. | | 48. | | 61. | |
| 10. | | 23. | | 36. | | 49. | | 62. | |
| 11. | | 24. | | 37. | | 50. | | 63. | |
| 12. | | 25. | | 38. | | 51. | | × | |
| 13. | | 26. | | 39. | | 52. | | × | |
| | | | | | | | | ***Total Marks*** | |

| **Total Marks in words** | | | **Grand Total** | |
|---|---|---|---|---|
| 1. ✓ | | | | |
| 2. ✓ | | ✓ | ✓ | |
| *Signature of Evaluators* | *Registration No.* | *Signature of the Deputy Chief* | *Signature of the Room Invigilator* | |

[ Turn over

*மாணவர் கவனத்திற்கு :*

i) இது வினாத்தாளுடன் கூடிய விடைத்தாள்.

ii) ஒவ்வொரு வினாவுக்கும் விடையளிக்கத் தேவையான இடம் கொடுக்கப்பட்டுள்ளது. கொடுக்கப்பட்டுள்ள அளவின்படியே விடைகளை எழுதவும்.

iii) இந்த வினாத்தாள் 'பொருத்துக' பிரிவையும் சேர்த்து மொத்தம் 63 வினாக்களைக் கொண்டுள்ளது.

iv) மாணாக்கர்கள் விடைகளை பென்சிலால் எழுதக்கூடாது. பென்சிலால் எழுதிய விடைகள் மதிப்பிடப்படமாட்டாது.

v) மாணாக்கர்களுக்கு வினாத்தாளைப் படிப்பதற்கென 15 நிமிடங்கள் கூடுதலாக தரப்பட்டுள்ளது.

கீழ்வரும் ஒவ்வொரு வினாவிற்கும் / முழுமைபெறாத கூற்றுகளுக்கும் ( Incomplete statements ) நான்கு மாற்று விடைகள் தரப்பட்டுள்ளன. மிகச் சரியான விடை என்று நீங்கள் கருதுபவற்றை தேர்ந்தெடுத்து அதன் கீழ் உள்ள விடை பகுதியில் விடையை குறியீட்டுடன் முழுவதுமாக எழுதவும் : $15 \times 1 = 15$

1. அலகிலா விளையாட்டுடையவர்

(A) கம்பர்

(B) அஞ்சுபாபி

(C) இறைவன்

(D) இராமகவி.

*விடை :* ________________

2. ஐம்பெருங்காப்பியங்களுள் ஒன்று

(A) சூளாமணி

(B) இனியவை நாற்பது

(C) மணிமேகலை

(D) மனோன்மணீயம்.

*விடை :* ________________

3. குழவி எவ்வாறு வாழ்தல் இனிது ?

(A) பிணி

(B) குற்றம்

(C) வருத்தம்

(D) வறுமை.

*விடை :* ________________

4. ஆருயிர் முதல்வன் யார் ?

(A) இந்திரன்

(B) ஆபுத்திரன்

(C) அறவண அடி

(D) சாவக மன்னன்.

*விடை :* ______________________

5. பேதை - எதிர்ச்சொல் தருக

(A) அறிவிலி

(B) அறிவாளி

(C) மடமை

(D) பெண்.

*விடை :* ______________________

6. வாழும் மக்களுக்குப் பொதுவானவை

(A) பாலும் பழமும்

(B) நாடும் வீடும்

(C) மழையும் பயிர்விளையும்

(D) சீரும் சிறப்பும்.

*விடை :* ______________________

7. 'ஆனந்தரங்கக் கோவை' என்ற நூலை எழுதியவர்

(A) சீனிவாச கவி

(B) இராம கவி

(C) சவ்வாதுப் புலவர்

(D) சதாசிவ தேசிகர்.

*விடை :* ______________________

8. ‘அதற்கு இங்கு சௌகரியப்படாது’ - என்றவர்

(A) அந்தணர்

(B) மகாவித்வான்

(C) மனைவி

(D) மாணவர்.

விடை : ______

9. உலகியல் வாழ்விற்கு .................... வேண்டும்.

(A) இன்பம்

(B) கல்வி

(C) பொருள்

(D) வீரம்.

விடை : ______

10. பிளிகிரிரங்கன் மலையில் வாழும் பழங்குடிகள் ஆடும் ஆட்டம்

(A) உம்ம தாட்ட

(B) சோலிகர குனித

(C) டொல்லு குனித

(D) பாகவத மேள.

விடை : ______

11. திம்மக்கா நட்டது

(A) அரசமரம்

(B) ஆலமரம்

(C) வேப்பமரம்

(D) பனைமரம்.

விடை : ______

12. இரட்டைக்கிளவிக்கு எடுத்துக்காட்டு

(A) நட நட

(B) எழு எழு

(C) மொடு மொடு

(D) கொடு கொடு.

*விடை :* ______________________________

13. வினையாலணையும் பெயருக்கு எடுத்துக்காட்டு

(A) பொங்கல்

(B) வந்தான்

(C) சென்றான்

(D) வந்தவன்.

*விடை :* ______________________________

14. மூன்று சீர்களால் அமைந்த அடி

(A) குறளடி

(B) அளவடி

(C) சிந்தடி

(D) நெடிலடி.

*விடை :* ______________________________

15. ஒற்றளபெடைக்கு எடுத்துக்காட்டு

(A) தொழாஅர்

(B) தூஉம்

(C) கலங்ங்கு

(D) நசைஇ.

*விடை :* ______________________________

கோடிட்ட இடங்களைத் தகுந்த விடைகளால் நிறைவு செய்க : 5 × 1 = 5

16. காயக்கண்டது காய்குலை ................... .

17. தருமத்தின் வாழ்வுதனை ................... கவ்வும்.

18. 'அவரை அவராகவே வாழவிடுவோம்' என்றவர் ................... .

19. தொழிலை மட்டும் குறிக்கும் பெயர் ................... .

20. இருளோ திணிந்தது. சுடரோ ................... .

21. பொருத்துக : 5 × 1 = 5

| | | | |
|---|---|---|---|
| (a) | இயேசு காவியம் | i) | வலித்தல் விகாரம் |
| (b) | எட்டுத்தொகை | ii) | டால்ஸ்டாய் |
| (c) | குரக்கினம் | iii) | கண்ணதாசன் |
| (d) | மினி இந்தியா | iv) | செர்டகாப் |
| (e) | ரஷ்ய இலக்கியவாதி | v) | ஹூஸ்டன் |
| | | vi) | புறநானூறு. |

*விடைகள் :*

a) ____________________

b) ____________________

c) ____________________

d) ____________________

e) ____________________

பின்வரும் ஒவ்வொரு வினாவிற்கும் ***ஒரு*** வாக்கியத்தில் விடை தருக : 10 × 1 = 10

22. ஐம்பூதங்கள் யாவை ?

23. செல்ல மழை பெய்ததும் பெண்கள் என்ன செய்தனர் ?

24. ஆனந்தரங்கப் பிள்ளை எழுதிய நாட்குறிப்பு அக்காலத்தில் நடந்த எவற்றைக் காட்சிப்படுத்துகிறது ?

25. சின்னப்பிள்ளை ஊரில் உள்ள ஆதிக்க வெறியர்களின் வெறுப்பினையும், பகையினையும் சம்பாதிக்கக் காரணம் என்ன ?

26. உலக இன்னல்களுக்கெல்லாம் காரணம் யாது ?

27. அரசனாக வேண்டுமெனில் என்ன செய்ய வேண்டும் என்கிறார் தேசிக விநாயகம் பிள்ளை ?

28. சுந்தர முனிவர் சுருங்கை வழி தோண்டக் காரணம் என்ன ?

29. அணி என்றால் என்ன ?

30. இரட்டுற மொழிதல் என்றால் என்ன ?

31. சொற்பொருள் பின்வருநிலை அணிக்கு ஓர் எடுத்துக்காட்டு தருக.

பின்வரும் ஒவ்வொரு வினாவிற்கும் ***மூன்று*** வாக்கியங்களில் விடை தருக : 15 × 2 = 30

32. ஒரு நாட்டின் உறுப்பாக அமைவன எவை ?

33. நாய்பெற்ற தெங்கம்பழமாவது எது ?

34. சேரனின் யானை தன் துதிக்கையை எதன் மேல் நீட்டியது ? ஏன் ?

35. இளைஞனின் வலிமையை கவிஞர் சிற்பி எவ்வாறு உரைக்கிறார் ?

36. அந்தணர் தன் மனைவியை அழைத்து மகிழ்ந்து கூறியது யாது ?

37. விடுதி மேலாளர் சாந்தா பார்பராவிலேயே நிலையாகத் தங்கக் காரணம் யாது ?

38. தீயவழியில் வரும் செல்வம் தீயவழியில் செல்வது திண்ணம் - எவ்வாறு ?

39. முத்தநாதன் எவ்வாறு அரண்மனைக்குள் நுழைந்தான் ?

40. திம்மக்கா கால்நடைகளுக்குச் செய்த உதவி யாது ?

41. விடியற்கால நிகழ்ச்சியாக சுந்தரம் பிள்ளையவர்களின் கற்பனையை விவரி.

42. மோனை என்றால் என்ன ? எடுத்துக்காட்டு தருக.

43. பண்புத்தொகையைச் சான்றுடன் விளக்குக.

44. ஆனந்தரங்கப் பிள்ளை காலத்தில் நடந்த திருமண வழக்கங்களுள் இரண்டினைக் குறிப்பிடு.

45. குணங்குடி மஸ்தான் இறைவனை நோக்கி இயம்புவது யாது ?

46. ஆனந்தரங்கப் பிள்ளையின் அன்புள்ளத்தை எடுத்துக்காட்டுக.

[ Turn over

*குறிப்பு :* பின்வரும் வினாக்களுக்கு இடம் சுட்டிப்பொருள் விளக்குக : 5 × 3 = 15

47. ''மணிப்புறாவா ? மாடப்புறாவா ?''

48. ''பசும்புல் தலைகாண்பரிது''

49. ''நான் பாடும் பாட்டைக் கேட்டு இந்த நடுக்காட்டில் மகிழக்கூடியவர்கள் யார் இருக்கிறார்கள் ?''

50. ''வேறு யாராவது மரங்களை எடுத்துக் கொண்டு போவதற்குள் எங்களுக்குக் கொடுத்தால் உதவியாக இருக்கும்''

51. ''சூதிற் பணயமென்றே அங்கோர் தொண்டச்சி போவதில்லை''

பின்வரும் ஒவ்வொரு வினாவிற்கும் ***ஐந்து*** அல்லது ***ஆறு*** வாக்கியங்களில் விடை தருக : 5 × 3 = 15

52. 'பாகவத மேள'த்தில் கோடங்கி எவ்வாறு காட்சி தருவான் ?

*அல்லது*

திம்மக்காவின் தொண்டினை விவரி.

53. அரியணையில் சிறுவனைக் கண்ட பெரியோர் இருவரும் என்ன நினைத்தனர் ?

*அல்லது*

அமெரிக்கர்கள் காலத்தைப் பொன்போல் போற்றும் இயல்பினர் என்பதை எடுத்துக்காட்டுக.

54. வஞ்சப்புகழ்ச்சி அணியை எடுத்துக்காட்டுடன் விளக்குக.

*அல்லது*

உயிரளபெடை என்றால் என்ன ?

55. ஆகுபெயர் என்றால் என்ன ?

*அல்லது*

''தீயினாற் சுட்டபுண் உள்ளாறும் ஆறாதே

நாவினாற் சுட்ட வடு'' - இக்குறட்பாவில் அமைந்துள்ள அணியை எடுத்துக்காட்டுக.

56. கீழ்க்காணும் பழமொழிகளுள் ஒன்றை மட்டும் விளக்குக.

அ) யானைக்கொரு காலம் வந்தால் பூனைக்கொரு காலம் வரும்

ஆ) கற்றோர்க்குச் சென்ற இடமெல்லாம் சிறப்பு

இ) புலிக்குப் பிறந்தது பூனையாகுமா ?

அடிபிறழாமல் எழுதுக : 1 × 4 = 4

57. ‘‘காதொளிரும் .......... வாழ்க’’

*அல்லது*

‘‘காயக்கண்டது .......... நாடே’’

பின்வரும் ஒவ்வொரு வினாவிற்கும் ***எட்டு*** வாக்கியங்களில் விடை தருக : 3 × 4 = 12

58. தோல் பொம்மலாட்டம் குறித்து நீ அறிவன யாவை ?

*அல்லது*

சின்னப்பிள்ளையின் சாதனைகளை விவரி.

59. பாரத நாட்டின் சிறப்புகளாக திரு.வி.க. கூறுவன யாவை ?

*அல்லது*

ஆபுத்திரன் மணிபல்லவத் தீவில் அடைந்த துன்பத்தை விவரி.

60. பூங்குன்றன், இளநாகன் இவர்களின் வழக்கு யாது ?

*அல்லது*

திருக்குறள் பன்னாட்டு அறிஞர்களின் பாராட்டைப் பெற்றுள்ளது என்பதை விவரி.

61. பின்வரும் பகுதியைப் படித்து கேட்கப்பட்ட வினாக்களுக்கு விடை தருக : $4 \times 1 = 4$

ஊர்த்திருவிழாக் காலங்களில் சிலம்பாட்டம், கபடி ( சடுகுடு ), வழுக்குமரம் ஏறுதல், உறியடித்தல், மஞ்சள் நீர் ஊற்றுதல் ஆகிய விளையாட்டுகளை இன்றைக்கும் சிற்றூரில் காணலாம். தமிழரின் தற்காப்புக்கலை விளையாட்டுகளில் ஒன்று சிலம்பாட்டம். நிலத்திலிருந்து ஓர் ஆளின் நெற்றி உயரம் வரை இருக்கும் தடியைச் சுழற்றி ஆடும் ஆட்டமே சிலம்பாட்டமாகும். உலக அரங்கில் தமிழரின் வீர விளையாட்டான கபடிக்கு தனியிடம் கிடைத்துள்ளது. கபடி விளையாடும் போது பாடிக்கொண்டே விளையாடுவது நம் மூதாதையர் வழக்கம்.

*வினாக்கள் :*

1. ஊர்த்திருவிழாக் காலங்களில் காணப்படும் விளையாட்டுகள் யாவை ?
2. சிலம்பாட்டம் என்றால் என்ன ?
3. தமிழரின் வீரவிளையாட்டு எது ?
4. நம் மூதாதையர் வழக்கம் யாது ?

*விடைகள் :*

1. 

2. 

3. 

4. 

62. பின்வருவனவற்றுள் ஏதேனும் ஒன்று குறித்துக் கட்டுரை வரைக : 1 × 5 = 5

i) மழைவளம் பெருக காடுகளை வளர்ப்போம்

ii) கைபேசி பயன்பாட்டில் நன்மை தீமைகள்

iii) என்னைக் கவர்ந்த கவிதையும் புலவனும்.

[ Turn over

63. உன் பள்ளியில் நடந்த ஆண்டு விழா நிகழ்ச்சிகளை விளக்கி உன் நண்பனுக்கு / தோழிக்கு மடல் ஒன்று வரைக. 5

*அல்லது*

நீ வாழும் பகுதியில் உள்ள தெருவில் குவிந்து வரும் குப்பைகளை அகற்றக்கோரி நகரசபை ஆணையருக்கு விண்ணப்பம் ஒன்று வரைக.

ಕರ್ನಾಟಕ ಪ್ರೌಢ ಶಿಕ್ಷಣ ಪರೀಕ್ಷಾ ಮಂಡಳಿ, ಮಲ್ಲೇಶ್ವರಂ, ಬೆಂಗಳೂರು – 560 003

**KARNATAKA SECONDARY EDUCATION EXAMINATION BOARD, MALLESWARAM, BANGALORE – 560 003**

ಎಸ್.ಎಸ್.ಎಲ್.ಸಿ. ಪರೀಕ್ಷೆ, ಏಪ್ರಿಲ್ — 2013

**S. S. L. C. EXAMINATION, APRIL, 2013**

ಮಾದರಿ ಉತ್ತರಗಳು

## MODEL ANSWERS

ದಿನಾಂಕ : 01. 04. 2013 ] **ಸಂಕೇತ ಸಂಖ್ಯೆ : 10-T**

Date : 01. 04. 2013 ] **CODE NO. : 10-T**

# ವಿಷಯ : ಪ್ರಥಮ ಭಾಷೆ — ತಮಿಳು

# Subject : First Language — TAMIL

[ ಪರಮಾವಧಿ ಅಂಕಗಳು : 125

**[ Max. Marks : 125**

கீழ்வரும் ஒவ்வொரு வினாவிற்கும் / முழுமைபெறாத கூற்றுகளுக்கும் ( Incomplete statements ) நான்கு மாற்று விடைகள் தரப்பட்டுள்ளன. மிகச் சரியான விடை என்று நீங்கள் கருதுபவற்றை தேர்ந்தெடுத்து அதன் கீழ் உள்ள விடை பகுதியில் விடையை குறியீட்டுடன் முழுவதுமாக எழுதவும் : 15 × 1 = 15

1. (C) இறைவன்

2. (C) மணிமேகலை

3. (A) பிணி

4. (B) ஆபுத்திரன்

5. (B) அறிவாளி

6. (C) மழையும் பயிர் விளையும்

7. (D) சதாசிவ தேசிகர்

8. (C) மனைவி

9. (C) பொருள்

10. (B) சோலிகர குனித

[ Turn over

11. (B) ஆலமரம்

12. (C) மொடு மொடு

13. (D) வந்தவன்

14. (C) சிந்தடி

15. (C) கலங்ங்கு.

கோடிட்ட இடங்களைத் தகுந்த விடைகளால் நிறைவு செய்க : 5 × 1 = 5

16. செந்நெல்

17. சூது

18. சுமித்ரா குல்கர்னி

19. தொழில் பெயர்

20. மெலிந்தது.

21. பொருத்துக : 5 × 1 = 5

| | | | |
|---|---|---|---|
| (a) | இயேசு காவியம் | iii) | கண்ணதாசன் |
| (b) | எட்டுத்தொகை | vi) | புறநானூறு. |
| (c) | குரக்கினம் | i) | வலித்தல் விகாரம் |
| (d) | மினி இந்தியா | v) | ஹூஸ்டன் |
| (e) | ரஷ்ய இலக்கியவாதி | ii) | டால்ஸ்டாய் |

பின்வரும் வினாக்களுக்கு ***ஒரு*** வாக்கியத்தில் விடை தருக : 10 × 1 = 10

22. நிலம், நீர், தீ, காற்று, வானம்.

23. நீராடி, முக்குளித்து நீலவர்ணப் பட்டுடுத்தினர்.

24. அக்காலத்து மக்களின் இன்ப துன்பங்கள், பழக்க வழக்கங்கள், தண்டனை முறை.

25. ஊர்க்கண்மாயினை குத்தகைக்கு எடுக்க முடிவெடுத்ததால்.

26. செல்வம் ஓரிடத்தில் குவிவதுதான்.

27. தன்னை மறந்து வாழ வேண்டும் / ஏழையாகி, எளியனாகி, தோழனாகி / தொண்டனாகி வாழ வேண்டும்

28. சீவகனை காப்பாற்றும் பொருட்டு .....

29. செய்யுளைச் சொல்லாலும், பொருளாலும் அழகுபடப் புனைவது.

30. சொல்லோ, தொடரோ இருபொருள் படுமாறு பாடுவது.

31. முன்னர் வந்த சொல்லும், பொருளும் பின்னரும் பலமுறை வருவது.

எ.கா. துப்பார்க்குத் .....

பின்வரும் ஒவ்வொரு வினாவிற்கும் ***மூன்று*** வாக்கியங்களில் விடை தருக : 15 × 2 = 30

32. இருபுனலும், வாய்ந்த மலையும், வருபுனலும், வல்லரணும்.

33. பிறருக்கு வழங்குதலும் அனுபவித்தலும் இல்லாதவன் செல்வம்.

34. வெண்கொற்றக் குடையை பெயர்த்து எறிந்த பழக்கத்தால், மாற்றானின் குடையென்று கருதி திங்கள் மேல்

35. பருவ நெருப்பில் காய்ச்சிய வாள்; புருவ நெரிப்பில் பூகம்பங்கள்; இமையைத் திறந்தால் சூர்யோதயங்கள்; கொட்டி முழக்கினால் உலகமே செவிடு, எட்டி உதைத்தால் திசைகள் தவிடு.

36. தேவியின் திருவருள், இரண்டு நாளைக்கு ஆகாரத்திற்குக் கவலை இல்லை.

37. குளிரும் இல்லை வெய்யிலும் இல்லை. அதிக பனியுமில்லை. ஆண்டு முழுவதும் குளு குளு.

38. தீயவழியில் கோடி கோடியாய்ச் சேர்த்தாலும் தீண்டக் கூட முடியாமல் தவிக்கின்றனர். வழித் தோன்றல்களே இழிந்த வழியில் செலவழித்துச் சீரழிவதைப் பார்க்கின்றோம்.

39. மெய்யெல்லாம் நீறு பூசி, வேணிகள் முடித்துக் கட்டி, கையினில் படைகரந்த புத்தகக் கவளி ஏந்தி.

40. பட்டியில் கட்டப்பட்ட மாடுகளுக்கு தீனி வைத்தல், மழை நீர் தடுப்புகள் கட்டி நீரைத் தேக்கித் தருதல்.

41. இருட்பகைவனான கதிரவன் தம்மையும் காய்வனோ என்று கருதி அஞ்சி தம் பெயரைச் சொல்லிக் கொண்டு திசைதோறும் ஒடுகிறது.

42. அடிகள் தோறும் முதல் சீரின் முதல் எழுத்து ஒன்றி வருதல்.

43. ஒரு தொடரில் பண்புப் பெயர் விகுதியாகிய ‘மை’ மறைந்து வந்தால்.

44. கழுத்தில் மாலையும், நெற்றியில் சந்தனமும், பாக்கு வெற்றிலை கொடுப்பது; சரவத்தி கொளுத்துவது; வெகுமானம் கொடுப்பது; பீரங்கி சுடுவது;

45. தேடினாலும் கிடைக்காத செல்வம்; தேன்கடல், அழகே, இணையற்ற கடவுளே. ஏழை முகம் பார்த்து துன்பக் கடலுள் ஆழ்த்தாமல் ஆட்கொள்க;

46. சென்னைப் பட்டணப் பிரஞ்சு படையெடுப்பின் போது மக்கள் சூடுபட்டவர்களாதலால் தாமரை இலை தண்ணீர் போல பயந்து அங்குமிங்கும் ஒடுகின்றனர் என்ற குறிப்பிலிருந்து

*குறிப்பு :* பின்வரும் வினாவிற்கு இடம் சுட்டிப்பொருள் விளக்குக : 5 × 3 = 15

47. *இடம்* : இத்தொடர் ஒரு பரிசு கொண்டு வந்தேன் என்ற ...

*விளக்கம்* : வைரமுத்து சென்ற விமானம் தாழப்பறந்த போது சுதந்திர தேவியை நோக்கி, ‘அமெரிக்கத் தாயே உனக்கு இந்தியப் புறாவொன்று வாங்கி வந்தேன் என்று கூற, அதற்கு தேவி, மணிப்புறா ..... என்று கேட்டாள்.

48. *இடம்* : திருக்குறள் - வான் சிறப்பு

*விளக்கம்* : விசும்பின் துளிவீழின் அல்லால் மற்றாங்கே ...

49. *இடம்* : ஏழையின் தமிழன்பு

*விளக்கம்* : பிள்ளையவர்களுடன் வந்த மாணாக்கர்கள் அந்தணரிடம், எங்கள் எஜமானர் உங்களுடைய பாடலைக் கேட்க விரும்புகிறார்கள் என்று கூற, அந்தணர் இவ்வாறு சொல்லிக் கொண்டே விரைந்து வந்து கதவைத் திறந்தார்.

50. *இடம்* : டால்ஸ்டாயும் பூர்ச்ச மரங்களும்

*விளக்கம்* : பண்ணை ஆட்கள், ஐயாவுக்கு சொத்தின் மீது ஆசையில்லை எனவே பூர்ச்ச மரங்களை வேறு யாராவது எடுத்துக் கொண்டு போவதற்குள் எங்களுக்கே கொடுங்கள் - எங்களில் ஒருவருக்கும் வீடு இல்லை.

51. *இடம்* : பாஞ்சாலி சபதம்

*விளக்கம்* : அனைத்தையும் தொலைத்த அண்ணனிடம் பீமன் உரைப்பது.

பின்வரும் ஒவ்வொரு வினாவிற்கும் ***ஐந்து*** அல்லது ***ஆறு*** வாக்கியங்களில் விடை தருக :

$5 \times 3 = 15$

52. தாடி, மீசை, பெரிய வயிறு, கூம்பிய தொப்பி. நடுவே நாமம், சிவந்த ஆடை, இடுப்பில் மணிச்சரம்.

*அல்லது*

திம்மக்கா மூன்று கிலோமீட்டர் தொலைவிற்கு 284 ஆலமரங்களை நட்டு வளர்த்தார். சாலையில் செல்வோருக்கும், கல்உடைப்போருக்கும் உதவும் வகையில் நீரூற்றி வளர்த்தல்.

53. பெரியோர்கள் இச்சிறுவனால் நம் வழக்கைப் புரிந்து கொள்ளவே முடியாதே. நல்ல தீர்ப்பு கிடைக்கும் என்ற நம்பிக்கை எனக்கு இல்லை.

*அல்லது*

காங்பாஷின் மாமாவை அழைத்துச் செல்ல ஹெலிகாப்டர் வரும். அலுவலகத்திற்கு ஒரு மேலாளர் நேரம் தவறாமல் செல்ல அவர்களுக்குக் கொடுக்கப்படும் வசதிகளைக் காணும் போது.

54. புகழ்வது போலப் பழிப்பதும் பழிப்பது போலப் புகழ்வதும்

*அல்லது*

செய்யுளில் ஓசை குறைந்தவிடத்து குறைந்த ஓசையை நிரப்புவதற்காக செய்யுளில் இடம் பெற்றுள்ள நெட்டெழுத்துக்கள் நீண்டு ஒலிக்கும். அவ்வாறு ஒலித்ததை உணர்த்த அதன் இன எழுத்துக்கள் குறியீடாக எழுதப் பெறும்.

55. ஒன்றன் பெயர் அதனைக் குறிக்காது அதனோடு தொடர்புடைய வேறொன்றைக் குறிப்பது.

*எ.கா.* : பூ நட்டான், ஊர் சிரித்தது.

*அல்லது*

வேற்றுமை அணி : இருபொருள்களை ஒப்பிட வந்த ஆசிரியர் ஏதேனும் ஒரு காரணத்தால் இரண்டையும் வேறுபடுத்துவது.

56. பழமொழி விளக்கம் :

அ) வாய்ப்பு அனைவருக்கும் வரும்.

ஆ) தோற்றம் கண்டு திறனை அளவிட முடியாது.

இ) தகுதியும், திறமையும், உறவு, தலைமுறை அடிப்படையில் வரும்.

அடிபிறழாமல் எழுதுக : 1 × 4 = 4

57. காதொளிரும் குண்டலமும் கைக்குவளை
யாபதியும் கருணை மார்பின்
மீதொளிர்சிந் தாமணியும் மெல்லிடையில்
மேகலையும் சிலம்பார் இன்பப்
போதொளிர்பூந் தாளிணையும் பொன்முடிசூ
ளாமணியும் பொலியச் சூடி
நீதியொளிர் செங்கோலாய்த திருக்குறளைத்
தாங்குதமிழ் நீடு வாழ்க !

*அல்லது*

காயக் கண்டது சூரிய காந்தி
கலங்கக் கண்டது வெண்தயிர் கண்டம்
மாயக் கண்டது நாழிகை வாரம்
மறுகக் கண்டது வான்சுழி வெள்ளம்
சாயக் கண்டது காய்குலைச் செந்நெல்
தனிப்பக் கண்டது தாபதர் உள்ளம்
தேயக் கண்டது உரைத்திடும் சந்தனம்
சீவல மங்கைத் தென்கரை நாடே.

பின்வரும் ஒவ்வொரு வினாவிற்கும் எட்டு வாக்கியங்களில் விடை தருக : 3 × 4 = 12

58. கன்னடத்தில் ஜக்கள கொம்பே ஆட்ட என்பர். மான்தோலில் செய்யப்படும். ஆட்டுவிப்போனின் கைத்திறனைக் கொண்டிருக்கும் பொம்மைகள் மூன்று அல்லது நான்கடி உயரம் கொண்டவை. ஒரே நேரத்தில் இரண்டு பொம்மைகளை ஆட்டுவிப்பர். பொம்மைகள் இடமிருந்து வலமாகச் செல்வது மரபு. அம்பைச் செலுத்துவம் தலை அறுந்து விழுவதும் சிறப்பான காட்சி. இதிகாச புராண கதைகளே இடம்பெறும்.

*அல்லது*

சின்னப்பிள்ளை :

கூலிப்பெண்களின் வருவாயை வாதாடிப் பெற்றுத் தருவார். பில்லுக் களஞ்சியம் அமைத்து சேமித்த தொகையில் மக்கள் நல்வாழ்வுப் பணிகளை ஏற்படுத்தினார். மக்கள் கடன்படும் நிலையை மாற்றினார். சுய உதவிக் குழுவின் வருவாயைப் பெருக்கினார். அதற்காகப் பல்வேறு துன்பங்களை அடைந்தார். ஊர்க்கண்மாயை ஏலம் எடுத்தார். மாநிலங்களில் இவரின் இயக்கம் விரிவடைந்தது. அரசின் உதவித்தொகை கிடைத்தது. 15 கோடி புழக்கத்தில் உள்ளது.

59. மலைகளில் உயர்ந்த இமயமலையை அணிந்துள்ள கங்கை பெருகும் நாடு. எல்லா விளைபொருளும் விளையும். கைத்தொழில், வாணிகம் வளரும். கலைகள் வேதம் அறியும். கோயில் நிறையும். சமய உண்மை விளங்கும். பழமையும் பெருமையும் கொண்டது.

*அல்லது*

மரக்கலம் போன பிறகு மணிபல்லவத்தில் வாழ்பவர் யாரும் இன்றி துன்பமுற்றான். பெருமை பொருந்திய பாத்திரம் பயன்படாமல் உள்ளது. தன் உயிரை மட்டும் காப்பதை மனம் ஒப்பவில்லை. பயனற்ற பாத்திரத்தால் முன்செய்த தவம் நீங்கியது. பாத்திரத்தைச் சுமப்பதில் பயனில்லை. கோமுகியில் பாத்திரத்தை விட்டான். வடக்கு நோக்கி உண்ணா நோன்புற்றான்.

60. மகளுக்குத் திருமணம் செய்ய நூறு பொற்காசுகளுக்கு பூங்குன்றன் நிலத்தை விற்றான். தன் மகன் உழைத்து பொருளீட்ட நிலத்தை நூறு பொற்காசுகளுக்கு வாங்கினான். உழும் போது புதையல் கிடைத்தது. புதையல் இவரின் முன்னோரால் புதைக்கப்பட்டிருக்கும். எனவே புதையல் பூங்குன்றனுக்கு சொந்தம் என்கிறார். நிலத்தை விற்ற நிலையில் புதையலில் தனக்கு உரிமையில்லை என்கிறார் பூங்குன்றன்.

*அல்லது*

ஜி.யு. போப் - ஆங்கிலத்தில் மொழி பெயர்த்தார்.

இரஷ்ய அறிஞர். ஜெர்மானிய அறிஞர் ஆல்பர்ட் இவர்கள் ஈர்க்கப் பெற்றனர். பிரஞ்சு அறிஞர், அரியல். 'தமிழ் இலக்கியத்தில் மிகப்பெரிய சாதனை படைத்த படைப்பிலக்கியம் திருக்குறள். மனித குலத்தின் மிக உயர்வான தூய்மையான சிந்தனைகளின் ஒட்டுமொத்த வெளிப்பாடு' - என்று பாராட்டியுள்ளார்.

61. பகுதியினைப் படித்து வினாக்களுக்கு விடை எழுதுதல் : $4 \times 1 = 4$

விடைகள் :

1. சிலம்பாட்டம், கபடி, வழுக்கு மரம், உறியடி, மஞ்சள்நீர் ஊற்றுதல்.
2. நிலத்திலிருந்து ஓர் ஆளின் நெற்றி வரை இருக்கும் தடியைச் சுழற்றி ஆடும் ஆட்டம்.
3. கபடி ( சடுகுடு )
4. கபடி விளையாடும் போது பாடிக் கொண்டே விளையாடுவது.

62. கட்டுரை : 5

முன்னுரை :

தலைப்பு குறித்த பொது சிந்தனைகள்.

சிறு தலைப்பு :

தலைப்பு குறித்து எழும் வெவ்வேறு பயன்பாடு, சிந்தனை, நன்மை, தீமை, மாற்றம் குறித்து ஏற்ற தலைப்புடன் எழுதுதல்.

முடிவுரை :

தலைப்பு குறித்த, இன்றைய தேவை, மாற்றங்கள், எதிர்கால நோக்கம் பயன் குறித்த செய்திகள் இடம்பெறும்.

63. மடல் : 5

வடிவமைப்பு மாறாது இருத்தல்.

விண்ணப்பம் :

வடிவமைப்புடன் ஏற்ற சொற்களுடன் தலைப்புக்கேற்ற சிந்தனைகள் இடம் பெறுதல்.